


Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 122

புதன்கிழமை
27 மார்ச் 2024

பங்குனி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை


### ராஜீவ்காந்தி கொலைவழக்கு

# முகாமிலுள்ள மூவரும் அடுத்தவாரம் விடுவிப்பு

## சென்னை உயர்நீதிமன்றில் தமிழக அரசு உறுதி

**சென்னை, மார்ச் 27**

**ராஜீவ்காந்தி கொலைவழக்கில் கைதாகி விடுவிக்கப்பட்ட பின்னர், சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள முருகன், ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸ் ஆகிய மூவரும் அடுத்தவாரம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்று தமிழக அரசு உறுதிப்படுத்தியுள்ளது.**

15

# மீசாலையில் கோர விபத்து முன்னாள் போராளி இறப்பு!

## சாரதியும் நடத்துநரும் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் சொகுசு பேருந்தும் மோட்டார்சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த முன்னாள் போராளி பரிதாபமாக உயிரிழந்தார்.

15

# இலங்கை அ.அட்டை முருகனுக்கு இல்லை

## வழக்கை முடிவுறுத்தியது மன்று

சென்னை, மார்ச் 27

தனக்கு இலங்கை அடையாள அட்டை வழங்குமாறு கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் முருகன் தாக்கல் செய்த வழக்கு, அட்டையாள அட்டை வழங்காமலேயே நேற்று முடிவுறுத்தப்பட்டது.

15

# அக்குபஞ்சரால் முதியவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 27

அக்குபஞ்சர் சிகிச்சையை மேற்கொண்ட முதியவர் ஒருவர் கிருமித்தொற்றால் பாதிக்கப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்தார். அச்சுவேலி - வளலாய் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் சற்குணராஜா (வயது -64) என்ற முதியவரே உயிரிழந்த

15



### மக்களின் கடும் எதிர்ப்பால்

# கைவிடப்பட்டது காணிப் பறிப்பு!

## கீரிமலையில் நேற்றுப் பதற்றம்

விரிவு - பக். - 15

# வடக்கில் குற்றச்செயல்கள் முற்றாகக் கட்டுக்குள்வரும்

## அண்மையில் புதிதாகப் பதவியேற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தில் குற்றச்செயல்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றிருந்த திலக் சி.ஏ.தனபால, இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சியே.

15










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபால சிறிசேன வெலிக்கடை செல்வார்

*உதய கம்மன்பில நம்பிக்கை*



**கொழும்பு, மார்ச் 27**
**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெகுவிரைவில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் செல்வார் என்று பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரசைத் தோற்றுவித்தார்கள். நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் மத்திய வங்கியை மோசடி செய்து, பொருளாதாரப் பாதிப்புக்கு வித்திட்டது.
நல்லாட்சி அரசின் அரச தலைவர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியால் தேசியப் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. தேசியப் பாதுகாப்பின் பலவீனத்தை அடிப்படைவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரதூரமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
பயங்கரவாதம் தொடர்பிலும், அரசுக்கு எதிரான செயற்பாடுகள் குறித்தும் ஏதேனும் தகவல் தெரிந்தும் அதை உரிய தரப்புக்கு அறிவிக்காமல் மறைப்பது 10 ஆண்டு கால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். அதனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெகுவிரைவில் வெலிக்கடைச் சிறைக்குச் செல்வார் - என்றார். (எ-இ)

## மைத்திரி வாக்குமூலம் சட்டமா அதிபரிடம்

கொழும்பு, மார்ச் 27
ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் 6 மணித்தியாலங்களுக்கு மேலாக மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலமே மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் தமக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி கடந்த 22ஆம் திகதி கண்டியில் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பிலேயே வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது. (எ-இ)

## பேருந்தில் திருட்டு; கர்ப்பிணிகள் கைது

கொழும்பு, மார்ச் 27
பேருந்தில் பயணித்த பயணிகளின் பணப்பைகள், தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட சொத்துகளைத் திருடிய குற்றச்சாட்டில் கர்ப்பிணிப் பெண்களை உள்ளடக்கிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
புலத்சிங்கள வீதி இங்கிரிய பிரதேசங்களில் வசிக்கும் இரண்டு கர்ப்பிணிப் பெண்கள் உட்பட மூன்று பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.
கொழும்பிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த பேருந்திலேயே அவர்கள் கைவரிசையை காட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கோப் குழுவில் இருந்து ஐவரே விலகினராம்!

*நாடாளுமன்றம் தகவல்*




கொழும்பு, மார்ச் 27
கோப் குழுவிலிருந்து இதுவரை ஐவரே உத்தியோகபூர்வமாகப் பதவி விலகியுள்ளனர் என்று நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.
தாம்பதவிவிலகியுள்ளோம் என ஐவர் மாத்திரமே எழுத்துமூலம் அறிவித்துள்ளனர் என்று அதன் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
அதன்படி டிலான் பெரேரா, துமிந்த திஸாநாயக்க, எரான் விக்கிரமரத்ன, மரிக்கார் மற்றும் சரித ஹேரத் ஆகியோரே பதவி விலகல் கடிதங்களைக் கையளித்துள்ளனர்.
ஏனையோர் எழுத்துமூலம் தெரியப்படுத்தும் வரையில் அவர்களின் பதவி விலகல் செல்லுபடியாகாது என்றும் நாடாளுமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.
அந்தக் குழுவிலிருந்து எதிரணி உறுப்பினர்கள் தொடர்ச்சியாகப் பதவிவிலகி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## சம்பளச் சிக்கல்களால் பதவி விலகமாட்டேன்

*மத்தியவங்கி ஆளுநர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 27
ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வால் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஆளுநர் பதவியில் இருந்து விலகப்போவதில்லை என்று இலங்கை மத்தியவங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.
எனக்குக் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் சம்பள உயர்வு, மறுபரிசீலனை போன்ற காரணங்களால் நான் வெளியேறமாட்டேன் என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில், நிறுவன ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் பொறுப்பு எனக்கு உள்ளது. தொழிற்சங்கங்களுடன் பேசியே மூன்று ஆண்டுகளுக்கு கூட்டு ஒப்பந்தம் மூலம் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (எ-இ)

## துரிதமாக்கப்படும் ஒழுக்காற்று விசாரணைகள்

கொழும்பு, மார்ச் 27
நீண்டநாள்களாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை விரைந்து முடிப்பதற்குப் பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.
இந்தப் பணியை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவிடம் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஒப்படைத்துள்ளார்.
பல்வேறு காலகட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுவரும் ஒழுக்காற்று விசாரணைகளால் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியமும், பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வும் கிடைக்காதுள்ளமையைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மீனுக்கு வீசிய வலையில் தானே சிக்கி மீனவர் சாவு

கொழும்பு, மார்ச் 27
மட்டக்களப்பு வாழைச்சேனை, புனானையில் குளம் ஒன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தான் வீசிய வலையில் சிக்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்த நபர் புனானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
உயிரிழப்புத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## தம்மைத் தக்கவைக்கவே பெரமுன பிரயத்தனம்


*பிவிருது ஹெல உறுமய குற்றச்சாட்டு*

கொழும்பு, மார்ச் 27
படுதோல்வியைத் தவிர்ப்பதற்கும் நாடாளுமன்றத்தில் சில ஆசனங்களைத் தக்கவைத்துக்கொள்ளவுமே பொதுத்தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ச கோருகின்றார் என்று பிவிருது ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதித்தேர்தலில் படுதோல்வி ஏற்படும் என்பது பஸிலுக்குத் தெரியும். ஜனாதிபதித்தேர்தல் முதலில் நடத்தப்பட்டால் மொட்டுத் தரப்பினருக்கு மேலும் பின்னடைவு ஏற்படும். இதனாலேயே தம்மைத் தக்கவைத்துக்கொள்ள முன்கூட்டியே பொதுத்தேர்தல் கோரப்படுகிறது. எந்தத் தேர்தல் நடந்தாலும் மொட்டுக் கட்சியால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பது உறுதி - என்றார். (ச-44)

## விசேட சோதனை; 12 பேர் கைது

கொழும்பு, மார்ச் 27
ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை ஒடுக்குவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட சோதனை நடவடிக்கையில் 12 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை ஒடுக்குவதற்காக பொலிஸ்மா அதிபரின் கீழ் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட சோதனை குழுவால் இதுவரை 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் திருத்தச் சட்டவரைவு தேர்தல்களைப் பிற்போடாது

## நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 27**

**நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டவரைவுகளின் ஊடாக எந்தவொரு தேர்தலையும் பிற்போட எதிர்பார்க்கவில்லை என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேர்தல் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதில் நிறைவேற்றதிகாரமுடைய அதிபர் முறைமையை ஒழிப்பது, ஊழலைக் கட்டுப்படுத்துவது மற்றும் விகிதாசார வாக்களிப்பு முறையை நீக்குவது. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்குப் பொறுப்பான உறுப்பினர்களைத் தெரிவு செய்வது என்பன பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் முறைமையை மாற்றுவதற்கோ ஒத்திவைக்கும் எண்ணத்திலோ எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எந்தவொரு வேட்பாளரும் இந்த தேர்தல் திருத்தம் குறித்து தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம் - என்றார். (ச-44)

# கெஹெலிய பிணை; ஏப்ரல் 3 இல் தீர்ப்பு



கொழும்பு, மார்ச் 27

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை பிணையில் விடுதலை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான உத்தரவை ஏப்ரல் 3 ஆம் திகதி அறிவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் இதனை அறிவித்தார். (ச-இ)

# இணைய அச்சுறுத்தல் 109 க்கு அறிவிக்கலாம்

கொழும்பு, மார்ச் 27

இணையத்தில் விடுக்கப்படும் பல்வேறு அச்சுறுத்தல்கள் தொடர்பில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடளிக்கலாம் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

அதன்படி dir.ccid@police.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது, 109 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்ட பிரச்சினைகளை தெரிவிக்கலாம்.

மேலும், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான துஷ்பிரயோகம் தடுப்புப் பணியகம் 24 மணிநேரமும் செயற்படும் என்றும், பாதிக்கப்படும் நபர்கள் எந்நேரமும் தொடர்புகொண்டு உதவிகோர முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# விரிவாக்கப்படும் வரி அறவீடுகள்!

வரி அறவிடும் நடவடிக்கையை விரிவுபடுத்தும் வகையில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து தனிநபர்கள், காணி, வாகனப்பதிவுகள், நிறுவனப் பதிவு, லீசிங் மற்றும் கடன் வசதிகள், வாகனப் பரிமாற்றம் உள்ளிட்ட பதிவுகளுக்கான தகவல்களை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

குறித்த தகவல்களை ஒன்லைன் ஊடாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கலாம் என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# 88 உயிரினங்களை கடத்தியவர்கள் கைது

தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 4 இலட்சம் ரூபா பெறுமதியான 88 விலங்குகளைக் கடத்தியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் அவர்கள் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை, புவக்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இளம் தம்பதியரே கைதாகினர்.

தவளை, மீன், குளவி, அணில், ஆமை, பல்லி, எலி, மற்றும் பிற வகை புழுக்கள் ஆகிய உயிரினங்களை பெட்டிகளில் அடைத்து இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வெளிநாட்டுத் தொழிலாளரை பாதுகாக்க டிஜிற்றல் திட்டம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை டிஜிற்றல் மயப்படுத்தும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் செயற்பாடு மிக விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இதன்மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை கடத்தல்காரர்கள் மற்றும் மோசடியாளர்களின் பிடியில் இருந்து பாதுகாக்க முடிவதுடன் வெளிநாட்டுத் தொழிலாளர்களை மேம்படுத்துவதோடு, குறைகளைக் கையாளும் நடைமுறைகளும் கையாளப்படும்.

அதன்படி அனைத்து வெளிநாட்டுத் தொழிலாளர்களின் தொலைபேசியிலும் ஒரு 'செயலி' இருக்கும். அதனூடாக அவர்கள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் நிலையில் இருக்கும் போது தமது தூதரகத்திலுள்ள அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தமுடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதினம் தெரியுமோ?

எங்களிட்ட துடக்குப் பாக்கிற மரபொண்டு இருக்கு. சிலருக்கு அந்தத் துடக்கு நெடுகப்பாப்பினம். வீணைக்கார அமைச்சர் எண்டாலே அவரை துடக்குக்காரரா ஒதுக்கி வைக்கிற பழக்கம் யாழ்ப்பாணக் கம்பஸில இப்பவும் இருக்கு. அதுக்கு என்ன காரணம் எண்டு அங்க முந்திப் படிச்சவைக்கு வடிவாத்தெரியும். அதால கம்பஸ்காரர் எண்டாலே அந்த அமைச்சருக்கும் ஆகாது. கீரியும் பாம்பும் மாதிரித்தான் கம்பஸ்காரரும் அமைச்சரும் நடந்துகொள்ளுவினம். கம்பஸ்காரருக்கு அடிச்சது, துவக்கால வெருட்டினது, கம்பஸ் பெடியள் சிலரைச் சுட்டது எண்ட விசயங்களுக்குப் பின்னால வீணைக்கட்சி இருந்தது எண்டதுதான் கம்பஸ் பெடியளுக்கு கோபம். அதால அவரை கம்பஸுக்கையே கால்வைக்கவிடாமல் பாத்தவை.

ஆனால் இப்ப மெல்ல மெல்ல அந்த நிலைமை மாறிக்கொண்டு போகுது போல கிடக்கு. இடைக் கிடை யாழ்ப்பாணக் கம்பஸ் பக்கமா அமைச்சரின்ர தலைக் கறுப்புத் தெரிஞ்சது. அதைவிட அவரின்ர சிபாரிசில தான் அங்க கொஞ்சக்காலமா செனட்டுக்கும் ஆக்களை அரசாங்கம் போட்டது. அதோட நிக்காமல் தனக்கு நெருக்கமானவைக்கு வேலையளும் கம்பஸுக்குள்ள எடுத்துக் குடுத்தவராம். எந்தக் கம்பஸ் தனக்கு எதிராதீயா வேலை செய்ததோ அதே கம்பஸ் தன்ர காலடியில கிடக்கவேணும் எண்டதுதான் அமைச்சரின்ர கனநாள் கனவு. இப்பிடி அவர் கனவு காண, பழம் நழுவி பல்கலைக்கழகத்தில விழுந்த மாதிரி ஒரு சம்பவம் நடந்திருக்காம்.

யாழ்ப்பாணக் கம்பஸின்ர பொறியியல் பீடம் கிளிநொச்சியில இருக்கு. அந்தப் பீடத்தை தொடங்கி பத்துவருசம் முடிஞ்சுது. அதைக் கொண்டாடுற நிறைவு விழா நாலைஞ்சு நாளைக்கு முதல் நடந்தது. அந்த நிகழ்வுக்கு வீணைக்கார அமைச்சர்தான் விருந்தினர். தலைக்கறுப்பே தெரியக்கூடாது துடக்குப்பார்த்து வைச்சிருந்தவரை தலைப்பாகை கட்டி கூப்பிட்டிருக்கினம். நிகழ்விலையும் எல்லாரும் அமைச்சருக்கு ஒரே வாழ்த்து மழையாம். இப்பிடி தன்னை விருந்தினராக் கூப்பிட்டதும், புகழ்ந்து தள்ளினதும் அமைச்சருக்கு மறக்கேலாத சந்தோசமாம். அவர் இப்பிடியெல்லாம் சந்தோசப்படோணும், அந்தச் சந்தோசத்தை வைச்சு தங்கட அலுவலைப் பாக்கோணும் எண்டதுதான் அவரைக் கூப்பிட்டவையின்ர நோக்கம். அமைச்சரைத்தான் விருந்தினராக் கூப்பிடவேணும் எண்டு ஒற்றைக்காலில் நிண்டு அதைச் செய்தும் காட்டியவர் வேற ஆருமில்லை, கிளிநொச்சி பொறியியல்பீடத்துக்கு பொறுப்பா உள்ளவர்தானாம்.

வீணைக்காரர் தான் விருந்தினரா வரப்போறார் எண்டு துணைவேந்தருக்கு அவர் மூச்சும் காட்டாமல், இரகசியமா வேலைபார்த்திருக்கிறார். நிகழ்வுக்குப் போனபிறகுதான் துணைவேந்தருக்கே இவர்தான் விருந்தினர் எண்ட விசயம் தெரியவந்திருக்குது. ஆனால் அதுக்காகத் திரும்பிவர ஏலாதே. அதால அவர் ஒருமாதிரிப் பல்லைக்கடிச்சுக் கொண்டு நிகழ்வு முடியும் மட்டும் நிண்டுட்டு வந்திட்டார். அதெல்லாம் சரி, இப்பிடி துணைவேந்தருக்கே தெரியாமல் வீணைக்கார அமைச்சரை ஏன் விருந்தினராக் கூப்பிட்டவை? அதுக்கும் காரணம் இருக்கு. பொறியியல் பீடத்துக்கு பொறுப்பா இருக்கிறவர் அடுத்தமுறை துணைவேந்தர் பதவிக்கு போட்டி போடப்போறாராம். அதுதான் இப்பவே அமைச்சரின்ர கடைக்கண் பார்வை தன்னில விழுந்தால், பதவி கிட்டும் எண்டு கொட்டாவி விடுறார். பாப்பம், அவர் பிடிக்கிற காக்கா பதவியைத் தருமோ, இல்லையோ எண்டு.



-பட்சி

padsi@uthayan.com

## இலங்கை சிறந்த உதாரணம்

### பெலாரஸ் அதிபர் புகழாரம்

கொழும்பு, மார்ச் 27

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு இலங்கை சிறந்த உதாரணம் என்று பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்துள்ளார். உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் இலங்கைக்கு உதவத் தயாராக உள்ளோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் எளிதாகச் சமாளிப்பீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. மன மகிழ்ச்சி அதிகரிக்கும். இலாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும். செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத வீண் செலவுகள் அதிகரித்தாலும் அதைச் சமாளிக்க பணம் கிடைத்துவிடும். நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். அரவணைத்துச் செல்வது அவசியம். கேட்டதை வாங்கித் தர முயற்சி செய்யவும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஆலோசித்து இறங்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். அதிகரிக்கும் செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**தனுசு:** உற்சாகமான நாள். மனத்தில் துணிச்சல் அதிகரிக்கும். செயல்களிலும் அது வெளிப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் மூலம் காரியம் அனுகூலமாகும். உதவி கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தொடங்கும் முன்பு ஆலோசித்துச் செயற்படவும். சிலருக்கு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண் அலைச்சலைத் தவிர்க்கவும்.

# பஸ் சேவை இன்மையால் மாணவர்கள் அந்தரிப்பு!

முல்லைத்தீவு, மார்ச் 27

ஒட்டுசுட்டான், பெரிய இத்திமடு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் தண்டுவான் பாடசாலைக்கு வந்து செல்வதில் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

முள்ளியவளை நெடுங்கேணி வீதியில், முல்லைத்தீவு வவுனியாவுக்கான ஒரேயொரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது. இந்த பஸ் காலையில் சென்று, பின்னர் பி.ப. 3 மணிக்குத் திரும்பும்.

இதனால் பிரதேச மாணவர்கள், பெரியஇத்திமடு கிராமத்திலிருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் 3 மணிக்கே வீடு திரும்பக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-13)

## அராலி சரஸ்வதியில் மெய்வன்மைப் போட்டி

கொழும்பு, மார்ச் 27

அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் கு.பாலமுருகன் தலைமையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ந.திருலிங்கநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-555)

## நீதிவானைக் கொல்லச் சதி? துரித விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 27

கோட்டை நீதிவான் திலின கமகேவை கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதித்திட்டம் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார். கோட்டை நீதிவான் திலின கமகேவை கிரனேட் லோஞ்சர் மூலம் தாக்குதல் நடத்தி கொலை செய்ய முயற்சிக்கப்படுகின்றது என்று கிடைத்த கடிதம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய விரிவான விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீதிவானைக் கொல்வதற்காக ஒருவர் தொலைபேசிமூலம் இந்தத் துப்பாக்கியைக் கோரினார் என்றும், துப்பாக்கியைப் பெற்றுக்கொள்ள அழைப்பு விடுத்த நபரின் தொலைபேசி இலக்கமும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

## வேலைவாய்ப்புக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

யாழ்ப்பாணம், மார்ச் 27

இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யக்கோரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் நிறைவுக்கு வந்தது. (எ-இ)



நாடறிந்த ஆடற் கலைஞரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளருமான கலைஞர் வேல் ஆனந்தன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு சென்றிருந்தார். தமிழிசை, தமிழ் ஆடல் தொடர்பான தனது எண்ணப் பதிவுகளை அங்கு பகிர்ந்து கொண்டார். (எ-66)


## பொலிஸ் துப்பாக்கி மாயம்

கொழும்பு, மார்ச் 27

மாத்தளை, வில்கமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் ரி-56 ரகத் துப்பாக்கி காணாமற்போன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பொலிஸ் உத்தியோகத்தர் பிரதான வாயிலில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் பாதுகாப்புச் சாவடியில் ஆயுதம் காணாமற்போயுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (எ-இ)






இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழைக் கிளையின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு, கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருத்தைலம் மந்திரிக்கும் திருச்சடங்கு யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறப்புற நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இந்தத் திருச்சடங்கில் குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், குருமட மாணவர்கள், இறைமக்களெனப் பலர் கலந்துகொண்டனர். (ச–27)



பிரசித்திபெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் இரண்டாவது பங்குனித் திங்கள் உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றது. இதில் அதிகளவான அடியவர்கள் பங்கேற்று பொங்கலிட்டு அம்மனை வழிபட்டனர். (ச–500)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் பங்குனி உத்தர நன்னாளை முன்னிட்டு அபிஷேக வழிபாடுகள் நடைபெற்று அம்மன் வீதி உலா வந்து அருட்காட்சியளித்தார். (எ–66)





பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும் தொழிற்றுறைத் திணைக்களமும் இணைந்து நடத்திய உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான மாதாந்த விற்பனைச் சந்தை, பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ப–9)




'கரித்தாஸ் கியூடெக்' நிறுவனத்தின் உள சமூக மேம்பாட்டூடாக உத்தியோகத்தர்களுக்கான நம்பிக்கையூட்டல் கருத்தமர்வு நிகழ்வு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் உளவியல் சமூக மற்றும் மனநோய் மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் வளவாளராகக் கலந்துகொண்டார். (ப–66)



மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு விழா, தரம் –5 புலமைப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கவிஞர் கி.கலைத்தாசனின் 'உணர்வின் விதைகள்' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. நிலைய முன்றிலில் இடம்பெற்ற நிகழ்வில் தலைவர் சி. அமிர்தலிங்கம் தலைமையுரையாற்றினார். (ப–36)



சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையில் கற்கும் மாணவிக்கு, வடமராட்சியைச் சேர்ந்த நபரின் நிதி உதவியில் சைக்கிள் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. (ப–9)



வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் மாதாந்த விற்பனைக் கண்காட்சி, வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் அனுசரணையில், வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் சிறுதொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனையில் ஈடுபட்டனர். (எ–27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்துக்கான சூழ்ச்சியே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்



### விஜித ஹேரத் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 27**

**அதிகாரத்துக்காகச் செய்யப்பட்ட அரசியல் சூழ்ச்சி நடவடிக்கையே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளைத் தெரியும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டால் அது தொடர்பான தகவல்களை வழங்கத் தயாராக இருக்கின்றேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள நிலையில், ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் நாடளாவிய ரீதியில் மீண்டும் பூதாகரமாக மாறியுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே 'அதிகாரத்துக்கான சூழ்ச்சியே ஈஸ்டர் தாக்குதல்' என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றாலும் உண்மையென்பது தெளிவாக இன்னும் தெரியவரவில்லை. இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அறிவிப்பு பாரதூரமானதாகும். ஏனெனில் அவர்தான் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை யார் நடத்தினார்கள் என்பது தனக்குத் தெரியும் என மைத்திரி கூறியுள்ளார். உண்மை தெரிந்தும் அதனை மறைத்து வைத்தமை குற்றமாகும். மைத்திரிபாலவால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியலில் தாக்கம் செலுத்தக்கூடும். இது தேர்தல் வருடம். எனவே, எதிர்காலத்தில் அரசியல் களத்திலும் பேசுபொருளாக மாறலாம். எனவே, மைத்திரியின் அறிவிப்பை சாதாரண விடயமாக கருதமுடியாது. இதன்மூலம் மக்கள் தூண்டப்படலாம். சமூகம்சார் பிரச்சினைகள் எழக்கூடும்"- என்றார். (ம-44)

## மைத்திரியை கைது செய்க!

### வலியுறுத்தும் சட்டத்தரணிகள்

கொழும்பு, மார்ச் 27

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்வதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன என்று ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் குற்றவியல் நடைமுறைச் சட்டம், தண்டனைச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் விதிகளை அவர் மீறியுள்ளார். முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை அவர் ஏன் இவ்வளவு காலமும் மறைத்து வைத்தார்? என்று அந்தச் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஈஸ்டர் குண்டுவெடிப்புத் தொடர்பாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்துகள் தொடர்பில் இந்தச் சங்கம் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாகக் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படவேண்டும் என்று அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (எ-இ)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த நாளை முன்னிட்டு வவுனியாவில் இலவச காப்புறுதி வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-18)

## தேர்தலுக்காக அரசு மது விற்பனை அனுமதி

### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 27

தேர்தலை மையமாக வைத்து, அரசாங்கம் 200 மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை வழங்கத்திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார். ஏற்கனவே 15 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு விட்டதாகவும் புதிதாக, 6 மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், தாங்கள் பதவிக்கு வந்ததும் சட்டவிரோதமான முறையில் வழங்கப்பட்ட மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-6)

## வவுனியா மக்களுடன் ஐ.தே.கட்சி சந்திப்பு!

வவுனியா, மார்ச் 27

ஐக்கிய தேசியக் கட்சி வவுனியாவில் மக்கள் கலந்துரையாடல் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டது.

இந்தக் கலந்துரையாடல் வவுனியா, தாண்டிக்குளம் பகுதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ரவி கருணாநாயக்க கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட மட்ட உறுப்பினர்கள், பல்வேறு சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்டவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110)

## கருத்தரங்கு

வவுனியா, மார்ச் 27

2021, 2022 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு, நிகழ்நிலை ஊடாக விண்ணப்பிப்பது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில், இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-110)

## மேதினக் கூட்டத்துடன் தீவிரமான பரப்புரைகள்

### பிரதான கட்சிகள் வியூகம்

கொழும்பு, மார்ச் 27

மே தினக் கூட்டத்தோடு தேர்தல் பரப்புரை நடவடிக்கையை தீவிரமாக முன்னெடுப்பதற்கு தென்னிலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் வியூகம் வகுத்துள்ளன.

பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என்பன தற்போது தொகுதிக் கூட்டங்களையும், மகளிர் மற்றும் இளைஞர் மாநாடுகளையும் நடத்திவருகின்றன. விமல் வீரவன்ஸ அணி, நிமால் அணி என்பனவும் மக்கள் சந்திப்புகளை நடத்திவருகின்றன. இந்த நிலையில் மே தினக் கூட்டத்தை மிகவும் பிரமாண்டமாக நடத்தி பலத்தைக் காட்டுவதற்கும் கட்சிகள் தயாராகிவருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்பது தொடர்பான அறிவிப்பு இன்னமும் வெளிவரவில்லை. அநேகமாக சித்திரைப் புத்தாண்டுடன்தான் இந்த அறிவிப்பு வெளிவரும் என்று கருதப்படும் நிலையிலேயே, மேதினத்தை தமது தேர்தல் பரப்புரையின் ஆரம்பப் புள்ளியாக கட்சிகள் இலக்கு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

## சமூகத்துக்குத் தொண்டாற்ற பெண்கள் துணிய வேண்டும்

### ஸ்ரான்லி டிமெல் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 27

ஒரு பெண்ணால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. பெண்கள் அச்சம் கொள்ளாது சமூகத்துக்குத் தொண்டாற்றும் வீரமங்கைகளாகச் செயலாற்ற வேண்டும் என முன்னாள் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மன்னார் பிரதேச சர்வசமயக் குழுவும், தொடர்பாடல் மையமும் இணைந்து நடத்திய நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெண்கள் ஒரு வட்டத்துக்குள் இருக்காது எமது உரிமைக்காகப் போராட வேண்டும். எவ்வித அச்சமும் இன்றி பெண்கள் எப்போது நடமாட முடிகின்றதோ அப்போதுதான் பெண்களுக்கான உரிமைகள் கிடைத்துள்ளன என்று அர்த்தப்படும். துணிந்து செயற்பட்டால் பலவற்றைச் சாதிக்க முடியும். நாம் எமது பிள்ளைகள் வாழ்வதற்கு ஏற்ற சமூகத்தை உருவாக்கவேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (எ-60)

## 50 புகையிரத நிலையங்களில் குடிநீர் சுத்திகரிப்புத் தொகுதி

கொழும்பு, மார்ச் 27

சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு, இலங்கை முழுவதும் அமைந்துள்ள 50 புகையிரத நிலையங்களில் குடிநீர் சுத்திகரிப்புத் தொகுதியை உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று லைக்கா ஞானம் அறக்கட்டளையினர் அறிவித்துள்ளனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே குறித்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் அல்லிராஜா சுபாஸ்கரனின் ஒழுங்கமைப்பில் குடிநீர் வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. லைக்கா ஞானம் அறக்கட்டளையினூடாக மாத்தறை பனவில கிராமத்தில், நூறுக்கு மேற்பட்ட மக்களுக்கான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அரசியல் பிழைத்தோர்க்கு...

இலங்கையை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகையும் கிலிகொள்ளவைத்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஐந்தாவது வருடத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுகைக்காக ஒன்றுகூடி இருந்தவர்கள் குருதிச் சகதிக்குள் புதைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், அவர்களுக்கு நீதி இன்னமும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது. சரியான வகையில், வெளிப்படையான மக்களாட்சி நடைபெறும் நாடென்றால், தாக்குதலின் பின்னணி தொடர்பான அத்தனை விடயங்களும் பகிரங்கப்படுத்தப்பட்டு மக்களின் உளக்காயங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு பல மாதங்கள் கடந்திருக்கும். ஆனால், சபிக்கப்பட்ட போக்குடைய இலங்கை அரசியலில் இவ்வாறான நடைமுறைகளெல்லாம் எக்காலத்திலும் சாத்தியப்படாத விடயங்களே.

நீதி மறுக்கப்படுவது ஒருபுறம் இருக்கையில், நீதியைத் தேடித்தேடி நொந்து - நலிந்து போனவர்களை மேலும்மேலும் துன்பப்படுத்தும் வகையிலான கருத்துகளைத் தெரிவிப்பதில் கைதேர்ந்தவர்களாகத்தான் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர். இதன் ஆகப்பிந்திய வரவாக, 'உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் மற்றும் தாக்குதல் பின்னணி என அனைத்தும் எனக்குத் தெரியும். நீதிமன்றம் பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்கும் பட்சத்தில் சாட்சியம் வழங்கத் தயாராக இருக்கின்றேன்' என்று தெரிவித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் சாட்சியத்தையும் பதிவுசெய்திருக்கின்றார் மைத்திரிபால சிறிசேன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விடயத்தில், மைத்திரிபால சிறிசேன மூன்றாம் நிலை நபர் அல்லர். இந்தக் கோரத்தாண்டவம் இடம்பெற்றபோது அவர்தான் நாட்டின் ஜனாதிபதி. அதுவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. இலங்கையின் சர்வ வல்லமை பொருந்தியவர் என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன் காலத்திலேயே நீதியான தீர்ப்பொன்றை வழங்கியிருக்க அவரால் முடியும். ஆனால், அவர் அதைச் செய்யவில்லை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் இழப்பீடு செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டபோதும்கூட மைத்திரி மௌனித்தே இருந்தார். தேர்தல் காலமான இக்காலத்தில்தான், 'உயிர்த்தஞாயிறு தாக்குதல்களை நடத்தியோரை எனக்குத் தெரியும்' என்று அவர் திருவாய் மலர்ந்திருக்கின்றார்.

மைத்திரி தீர்வு தருவார் என்று நம்பியிருந்த மக்களை ஏமாற்றியது மட்டுமல்லாமல், தற்போது அவர்களின் உணர்வுகளுடன் விளையாடும் கைங்கரியத்தையும் அவர் முன்னெடுப்பது ஆகப்பெரும் பச்சாதாபத் தன்மையதே. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில், காலம் கடந்துதான் உண்மைத் தன்மைகளை அவர் அறிந்துகொண்டார் என்றால், அதை உரிய சட்டப்பொறிமுறைகள் ஊடாக வெளிப்படுத்தி முடியுமான அளவுக்கு மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகளை மைத்திரி மேற்கொள்ளவேண்டும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அதற்குரிய வாய்ப்புகள் மைத்திரிக்குத் தாராளமாகவே இருக்கின்றன. அதைவிடுத்துவிட்டு இரகசியம் பேணும் விளையாட்டுகளை செயற்படுத்திக் கொண்டிருப்பதற்கு இதுவொன்றும் சு.க. - தயாசிறி மோதல் அல்ல. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்கின்றது சிலப்பதிகாரம். காலம் என்பது பூமராங் போன்று விடுகைப்புள்ளியைத் திரும்பித்தாக்கும் வலுவான தன்மையுடையது. அற்ப அரசியலுக்காக மக்களின் உணர்வுகளுடன் மைத்திரி போன்றோர் தொடர்ந்து விளையாடுவார்களானால், வரவிருக்கும் தேர்தல்களில் இலங்கை ரூபாவைப் போன்று அத்தனை பேரும் வலுவிழப்பர்.






## 4.5 வீதமாக அதிகரித்தது இலங்கைப் பொருளாதாரம்

கொழும்பு, மார்ச் 27

**கடந்த இறுதிக் காலாண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.5 வீதமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை மத்தியவங்கியில் நேற்றுமுன்தினம் நடந்த நாணயக் கொள்கை மீளாய்வுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை விடவும் இது 1.6 வீத அதிகரிப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கொள்கை வட்டி விகிதம் குறைப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கை மத்தியவங்கி அதன் கொள்கை வட்டி விகிதங்களைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

துணைநில் வைப்பு வசதி விகிதத்தை 8.50 சதவீதமாக 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், துணைநில் கடன் வசதி விகிதத்தை இலங்கை மத்தியவங்கி 9.50 சதவீதமான 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளது. (எ-இ)

## அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்க அனுமதி

தேசிய குறைந்தபட்ச ஊதிய சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதற்கமைய தேசிய தொழிலாளர் ஆலோசனைச்சபையின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்பட்ட குழு சம்பளத்தை 17,500 ரூபாவாக அதிகரிக்க பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, தேசிய குறைந்தபட்ச தினக்கூலியும் 500 ரூபாயில் இருந்து 700 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் விதிகளின்படி, குறைந்தபட்ச ஊதியம் 12, 500 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கழிவுத் தேயிலை; சிக்கிய கொள்கலன்கள்

கழிவுத் தேயிலைகளுடன் ஏற்றுமதிக்குத் தயாராகவிருந்த 3 கொள்கலன்கள் இலங்கை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரமும் இதேபோன்று ஏற்றுமதிக்காக தயாராகவிருந்த கழிவுத் தேயிலை கொண்ட நான்கு கொள்கலன்களை இலங்கை சுங்கம் பொறுப்பேற்றது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-இ)



## ஐ.எம்.எப். உடனான பயணம் கத்தி மேல் நடப்பதற்குச் சமன்

### பீற்றர் புரூவர் தெரிவிப்பு

சர்வதேச நாணயநிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கை இலங்கை அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒரு சந்தர்ப்பம். ஆயினும் இந்தப் பயணம் கத்தியின் மீது நடப்பதைப் போன்றது.

- இவ்வாறு சர்வதேச நாணய நிதியக் குழுத்தலைவர் பீற்றர் புரூவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டு, பல்வேறு தீர்வுத் திட்டங்களைப் பற்றி நாங்கள் கேள்விப்படுகிறோம். பல்வேறு நல்லெண்ண அறிகுறிகளை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. மாற்று யோசனைகளையும் நாங்கள் செவிமடுக்கத் தயாராகவுள்ளோம். ஆனால் உரிய காலப்பகுதிக்குள் உரிய இலக்கை அடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

**நாளை**

28.03.2024
**வியாழக்கிழமை**
**பங்குனி-15**
சுபநேரம் : 07.43 - 09.13
ராகுகாலம் : 01.43 - 03.13

சங்கடஹர சதுர்த்தி

**நாளொரு நல்வார்த்தை**

**கோபம் விஷம் குடிப்பதைப் போன்றது ஆனால் நம்பிக்கை உங்கள் எதிரிகளையும் அழிக்கும் வல்லமை மிக்கது.**

—நெல்சன் மண்டேலா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, பாடசாலை முதல்வர் அ.ஆனந்தராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-13)

# விதை பதப்படுத்தும் நிலைய திறப்பு விழா

வவுனியா, மார்ச் 27

சோளப் பயிர்ச் செய்கைக்கான விதை பதப்படுத்தும் நிலையம் விவசாய அமைச்சர் மஹிந்த அபயவீரவால் வவுனியாவில்கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அந்த நிலையத்தில் விவசாயிகளுக்காக அமைக்கப்பட்ட வியாபார நிலையத்தைத் திறந்துவைத்து, வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மேலதிக மாவட்ட செயலர் தி.தினேஷ்குமார், செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-18)



கழகம் அமைப்பால் யாழ்.புங்குடுதீவு மத்திய கல்லூரிக்கு பூச்சாடிகளும் மற்றும் பழமரக்கன்றுகளும் அண்மையில் வழங்கப்பட்டன. குறித்த அமைப்பின் நிறுவுநரும், முற்போக்கு சிந்தனையாளரும், முத்த எழுத்தாளரும், கவிஞருமாகிய அமரர் சுப்பிரமணியம் வில்வரெத்தினத்தின் 18ஆம் வருட நினைவை முன்னிட்டே அவை வழங்கப்பட்டன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கடலில்
கலந்திருக்கும்
ஒருதுளி அல்ல.
ஒரு துளிக்குள்
ஒளிந்திருக்கும்
பெருங்கடல்
- ரூமி

புதன் பொய்கை

27.03.2024
புதன்கிழமை

# வெப்பம் காவுகொள்ளும் பூமியில் அதிகரிக்கும் பூகோள வெப்பம்!

**இலங்கையில் 1990ஆம் ஆண்டில் வெப்பம் காரணமாக ஏற்பட்ட இறப்புகளைவிட 2030ஆம் ஆண்டளவில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை ஐந்து மடங்காக அதிகரிக்கும் என உலக சுகாதார நிறுவனம் கணிப்பிட்டுள்ளது.**

மருத்துவர்
சி.யமுனாநந்தா

இலங்கையில் வறட்சியான காலநிலையில் ஏற்படும் பாதிப்புகள் தற்போது மிகையாக அதிகரித்துக் காணப்படுகின்றன. சூரியன் இலங்கைக்கு உச்சம் கொடுக்கும்போது அதிக வெப்பம் ஏற்படுவது வழமை. ஆனால் தற்போது பூகோள வெப்பமாதல் அதிகரித்தமையாலும் அதனால் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களாலும் அதிக வறட்சி, சூழல் வெப்பம் அதிகரித்தல் என்பன மக்களுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்திவருகின்றன. இவற்றில் சுவாச நோய்கள், தோல் நோய்கள், நீரிழப்பால் ஏற்படும் மயக்கம் என்பன குறிப்பிடத்தக்கவை. வெப்பத்தால் சூழலில் அதிக தூசிகள் காற்றில் சேரும்போது ஆஸ்துமா, தொண்டை அழற்சி, தும்மல் என்பன ஏற்படலாம் சூரியஒளியின் தாக்கத்தால் சரும அழற்சி ஏற்படலாம், தோலினை சொறியும்போது தோற்புண்கள் ஏற்படலாம், போதிய அளவு நீரினை அருந்தாவிடில் நீரிழப்பால் மயக்கம் ஏற்படலாம். இவ்வாறான தாக்கங்கள் பொதுவாக முதியவர்களிடத்தில் அதிகரித்திருக்கும்.

உலக சுகாதார நிறுவனம் இலங்கையில் வெப்பம் காரணமாக ஏற்படும் மரணங்களை 2015ஆம் ஆண்டில் ஆராய்ந்தது. இதன்போது 1990ஆம் ஆண்டில் வெப்பம் காரணமாக ஏற்பட்ட இறப்புகளைவிட 2030ஆம் ஆண்டளவில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை ஐந்து மடங்காக அதிகரிக்கும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காற்று மாசுபடல், வெப்பஅலைகளின் தாக்கம், அதிகரித்த வெப்பம் காரணமாகப் பெருகும் ஒட்டுண்ணிகள், நுண்ணுயிர்களின் தாக்கம் என்பன இந்தக் கணிப்பீட்டில் அன்று கருத்தில் கொள்ளப்பட முடியாத நவீன இயற்கைப் பாதகங்கள் ஆகும். எனவே வெப்பம் காரணமாக மனிதருக்கு ஏற்படும் அசௌகரிய நிலைகள் எதிர்பார்த்ததை விட இன்னமும் அதிகம்.

**வெப்பத்தின் பாதிப்புகள்**

அதிக சூழல் வெப்பம் காரணமாக உடல் வெப்பநிலை அதிகரிப்பு, வியர்த்தல், உடலில் நீரின் அளவு குறைதல், இதயப்பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு என்பன ஏற்படலாம். சோடியம் சமநிலை உடலில் குறைவதால் தசைப்பிடிப்பு ஏற்படலாம். அதிக வெப்பச்சூழலில் வாழும்போது மனரீதியான பாதிப்புகள், சினம் அதிகரிப்பு, மனச்சோர்வு, போதைப் பாவனை என்பனவும் அதிகரிக்கும். சிந்திக்கும் திறன் குறைதல், கல்வியில் நாட்டம் குறைதல் என்பனவும் ஏற்படலாம். நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், இருதயநோய் உடையவர்களிலும் பொதுவாக 65 வயதுக்கு மேற்பட்டோருக்கும் வெப்பத்தின் தாக்கம் அதிகமாகக் காணப்படும். அதேபோல் 5 வயதுக்கு உட்பட்டோருக்கும் அதிக நீரிழப்பு சூழல் வெப்பநிலை அதிகரிப்பதால் ஏற்படும். வெம்மையை எதிர்கொள்ள கர்ப்பிணித்தாய்மார்களும் போதிய அளவு நீராகாரங்களை எடுத்தல் வேண்டும். மேலும் மாதவிடாய் நின்ற பெண்களுக்கும் வெப்பச் சூழலில் அதிக நீராகாரம் தேவை. உடற்பருமனானவர்கள் தமது உடலின் வெப்பநிலையைச் சீர்நிலையில் பேணுவதற்கு சிரமப்படுவர். இவர்களும் அதிக நீராகாரங்களை எடுத்தல் வேண்டும். ஒருவர் நாளொன்றுக்குக் குறைந்தது 2.5 லீற்றர் தொடக்கம் 3 லீற்றர் நீரினைப் பருக வேண்டும். புகைப்பிடித்தல் சுவாசவீதத்தைப் பாதித்து வெப்பச் சூழலை எதிர்கொள்ளலை சிரமப்படுத்தும். மேலும் மதுபானம் அருந்துதல் அதிக அளவு பாதிப்பைத் தரும். வெப்பச்சூழலில் கடின வேலை செய்வோர் குறிப்பாக கட்டுமான வேலை, விவசாயம், இராணுவம், பொலிஸ், தீயணைப்பு வீரர்கள் அதிகம் பாதிக்கப்படலாம். குறிப்பாக 11 மணி தொடக்கம் 2 மணிவரை கடின வேலைகள் செய்யாது வெயிலில் இருந்து ஒதுங்கி இருத்தல் நல்லது.



வெப்பமான காலநிலையில் மரநிழல்கள் காற்றோட்டம் வெப்பத்தைச் தணியச் செய்யும். வீடுகளில நாம் நீராடுவதால் வெப்பப் பாதிப்பைக் குறைக்கலாம். வீட்டின் உட்புறத்தில் காற்றாடிகள் மூலம் குளிர்ச்சியினை ஏற்படுத்துதல், குளிரூட்டிகளை இயக்கல் என்பனவும் வெப்பப் பாதிப்பைக் குறைக்கும். வீடுகளில் தளர்வான ஆடைகள் மற்றும் பருத்தி ஆடைகள் அணிதல் வெப்பத்தாக்கத்தைக் குறைக்கும். வெப்பமான சூழலில் அதிக வியர்த்தலை உண்டாக்கும் செயற்பாடுகளைத் தவிர்த்தல் நல்லது.

நாம் அதிகம் அருந்தக் கூடிய பானங்களாக இளநீர், பழச்சாறுகள், தக்காளி, வெள்ளரிப் பழம், மரக்கறி வகைகளும் உதவும். இனிப்பான பானங்கள், மதுபானம், கோப்பி என்பனவற்றைத் தவிர்த்தல் நல்லது. உப்புக்கூடிய உணவுகள் நீரிழப்பை ஏற்படுத்தும். கடினமான உணவுகள் சமிபாடடைய சிரமமாக அமைவதால் அவற்றினையும் தவிர்த்தல் வேண்டும். வெளிச்சத்தில் செல்லும்போது வெண்ணிறமான ஆடைகள் அணிதல் நல்லது. வெப்பப் பாதிப்பால் தோல்களை பாதுகாக்க முழுமையான ஆடை அணிந்து வெளியில் செல்வது நல்லது. சூரியக் கதிரின் தாக்கம் தோல் அழற்சியினை ஏற்படுத்தலாம். தோலின் நிறத்தினை கருமையாக்கி தோல் வறட்சி அடையலாம். அதிக சூரிய ஒளி கண்களையும் பாதிக்கலாம். இதனைத் தவிர்ப்பதற்கு விசேட கண்ணாடிகளை அணியலாம்.

வெப்பப்பாதிப்பு எதிர்பார்த்ததை விடவும் தீவிரமாகிச் செல்கின்றது. ஆதலால், நாம் எவ்வளவுக்கு எவ்வளவு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் தற்காப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றுகின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எமது ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த முடியும்.

வெப்பத்தால் சூழலில் அதிக தூசிகள் காற்றில் சேரும்போது ஆஸ்துமா, தொண்டை அழற்சி, தும்மல் என்பன ஏற்படலாம் சூரியஒளியின் தாக்கத்தால் சரும அழற்சி ஏற்படலாம், தோலினை சொறியும்போது தோற்புண்கள் ஏற்படலாம், போதிய அளவு நீரினை அருந்தாவிடில் நீரிழப்பால் மயக்கம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஞ்சற்ற உணவும் வளமான வாழ்வும்!



**கி.கோவர்த்தனி**
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

நவீனமாகிச் செல்லும் உலகில் நாமும் பழைமையை மறந்துவிட்டு புதிய விடயங்களுக்கு முதலிடம் கொடுப்பவர்களாகவும் பழைமையைக் கைவிடுபவர்களாகவுமே இருக்கின்றோம். இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்க்கை முறையை நாம் வாழ மறுக்கிறோம் என்பது கசப்பான உண்மையே. இன்று உணவுற்பத்தியில் குறிப்பாக காய்கறி மற்றும் பழவகை உற்பத்தியில் இரசாயன உரங்கள்தான் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளன.



**யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் இன்று இயற்கை உரம் தயாரிக்கப்படுகின்ற போதிலும், கல்லுண்டாய் இயற்கை உரத்தயாரிப்பில் தனித்துவமாய் நிற்கின்றது என்றால் அது மறுத்துரைக்கப்பட முடியாத கூற்றே.**

இயற்கை உரம் என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகவே பலராலும் கருதப்பட்டது. இந்த எண்ணப்பாட்டைத்தான் மாற்றி எழுதிக் கொண்டிருக்கின்றது வலி.தென்மேற்கு சபையின் ஆளுகைக்குட்பட்ட கல்லுண்டாயில் அமைந்துள்ள உரத்தயாரிப்பு மையம். கடந்த 30 வருடங்களாக கல்லுண்டாய் என்பது திண்மக் கழிவகற்றல் மையமாகவே அறியப்பட்டது. ஆனால் தற்போது அதன் முகம், கழிவகற்றல் மையம் என்பதைத்தாண்டி இயற்கை உரத்தயாரிப்புக் களம் என்பதாக மாற்றம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இன்று இயற்கை உரம் தயாரிக்கப்படுகின்றபோதிலும், கல்லுண்டாய் இயற்கை உரத்தயாரிப்பில் தனித்துவமாய் நிற்கின்றது என்றால் அது மறுத்துரைக்கப்படமுடியாத கூற்றே.

'குப்பைகளும் கூழங்களும் இலையான்களுமாக ஒரு காலத்தில் அருவருக்கத்தக்க இடமாகவே கல்லுண்டாய் காணப்பட்டது. வலி.தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பெடுத்ததன் பிற்பாடு இந்த இடத்தின் தோற்றமே மாறிவிட்டது. இன்று ஒரு நாளில் சராசரியாக மூவாயிரம் கிலோ இயற்கை உரம் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. மணல் அகழ்ந்த இடமாக எமக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதியில் நாம் மேற்கொண்ட செயற்றிட்டங்கள் வார்த்தையால் அளந்துவிடமுடியாதது' என்று இந்தத் திட்டத்தின் வெற்றியையும், அதன் பின்னால் வலி. தென்மேற்கு பிரதேசசபை கொண்டிருந்த அர்ப்பணிப்பையும் பெருமிதத்துடன் நினைவுகூருகின்றார் வலி. தென்மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரான ஜெபநேசன்.

'நாட்டில் அண்மையில் இரசாயன உர இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டபோது எமது தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரத்துக்கு மிகப்பெரிய கேள்வி இருந்தது. உண்மையில் மாற்றுத் தெரிவாக அல்லாமல், பிரதான தெரிவாகக்கூட செயற்கை உரத்தை மக்கள் மத்தியில் கொண்டுசென்று சேர்ப்பிக்க வேண்டும். இந்தத் திட்டம் இன்னமும் உரிய பொறிமுறைகள் ஊடாக ஊக்குவிக்கப்படும் பட்சத்தில், இயற்கை உரம் நாட்டின் டொலர் வெளிச்செல்கையை மீதப்படுத்தும்' என்று தெரிவிக்கின்றார் களப்பணியாளரான நிரூஜன் என்பவர்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளும்போது அதன்மூலம் கிடைக்கின்ற உற்பத்தி மிக அதிகம்தான் என்பதை மறுப்பதற்கில்லை. அதற்குக் காரணம் நாம் இரசாயன உரத்துக்கு மிகையாக வினையாற்றும் விதை இனங்களை நம்பியிருப்பதும், எமது மண் வளத்தை இரசாயன உரத்துக்கு ஏற்ப பழக்கப்படுத்தி வைத்திருப்பதுமாகும் என்று சொன்னால் அது ஏற்கக்கூடிய கருத்தே. இலாபத்தை மையப்படுத்தி மேற்கொள்ளும் இத்தகைய விவசாயத்தால் நாம் நஞ்சுக் காய்கறிகளையே உட்கொண்டு வருகின்றோம்.

இரசாயன உரத்தைப் பயன்படுத்தி நச்சுக் காய்கறிகளை உருவாக்கி பல மடங்கு இலாபத்தைப் பெற்று, அந்தப் பணத்தை மருத்துவத்துக்குச் செலவிடுவதைவிட, நஞ்சற்ற ஆரோக்கியமான காய்கறிகளை உற்பத்தி செய்து ஆரோக்கியமான வாழ்வைக் கட்டமைத்துக் கொள்வதென்பது எத்தனையோ தகும். ஆதலால் அரசாங்கமும் இயற்கை உரத்தை மையப்படுத்திய விவசாயத்தை ஊக்குவிக்கவேண்டும். அதைநோக்கி சடுதியாக இல்லாவிட்டாலும் மெல்லமெல்ல எம் விவசாயிகளை வழிப்படுத்தவேண்டும். அதுவே நஞ்சற்ற உணவுப் பழக்கத்தையும், அதன்மூலம் இலங்கையர்களின் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்தும்.

---

# சித்தத்தை சிவமாக்கும் சித்த வைத்தியம்

**சாம் ரமேஸ்குமார்**

சுவர் இருந்தால்தான் சித்திரத்தைத் தீட்டமுடியும். அந்தச் சித்திரம் ஒருபோதும் சிதைந்து போகாமலும் பிறரைக் கவரும் தன்மையுடனும் என்றும் அழகானதாக இருக்க வேண்டுமானால், சுவர் எப்போதும் பலமானதாக இருக்கவேண்டும். இந்தச் சித்திரத்தைப் பிரதிபலிக்கும் சுவரைப்போல், உடலும் மனதும் பலமானதாகவும் நோயற்றதாகவும் இருந்தால்தான். அதற்குள் குடிகொண்டு எங்கும் பரந்து இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்து இருக்கும் ஆன்மாவை ஒரு மனிதனால் பரிபூரணமாக உணர்ந்து கொள்ளமுடியும்.

சித்த மருத்துவம் என்பது ஒரு மனிதன் தன் ஆன்மாவை உணர்வதற்கான அகம் - புறம் சார்ந்த ஒரு வாழ்வியல் முறையாகும். அந்த முறையின்படி ஒருவன் தன் வாழ்நாளில் பயணித்தால் தன்னுடைய இயல்பான சுதந்திரத்தை அல்லது விடுதலையை பரிபூரணமாக உணர்ந்துகொள்ளமுடியும்.

இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் ஒரு மனிதன் தன் வாழ்நாளில் தன் சுயத்தை உணர்வதற்குப் பெரும் தடைக்கல்லாக இருப்பது வறுமையும் நோயும்தான். அந்த இரண்டையும் இல்லாமல் செய்வது இறைவனின் மிகப்பெரும் கடமையாகும். அதனால் தான் தன்னைத் தனக்குள் உணர முற்படும் மனிதனின் சரீர நோயைக் குணப்படுத்துவதற்கும் அவன் அகத்தை ஞானத்தால் குளிரச் செய்வதற்கும் சித்தர்கள் மூலமாக சித்த மருத்துவத்தை இவ்வுலகுக்கு இறைவன் தோற்றுவித்தான்.

சித்தத்தை சிவன்பால் வைத்த ஒரு சித்த மருத்துவனால் மட்டும் தான் சித்தர்களின் சித்த மருத்துவ ஞானத்தை முழுமையாக பயின்று இவ்வுலகில் நடைமுறைப்படுத்தமுடியும். இல்லையேல் அந்த மருத்துவம் வெறும் கானல் நீரேயாகும். சித்த மருத்துவத்தை கொடுக்க நினைப்பவனும் அதைப் பெற்று பயன்பெற நினைப்பவனும் அகங்காரமற்று ஒரு புள்ளியில் சந்தித்தால் மட்டுமே நூறு விதமான வெற்றியைப் பெறமுடியும். இதுவே யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

மேலைத்தேச மருத்துவம் புறத்திலே வெற்றி பெறுகின்றது. ஆனால் சித்த மருத்துவமோ புறமாகிய சரீரத்தையும் குணமாக்கி அகமாகிய மனத்தையும் வளப்படுத்தி ஒருவனை தன் தெளிந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. அதனால்தான் அது சித்த மருத்துவம் எனப்போற்றப் படுகின்றது.




வெறும் மூலிகைகளைப் பற்றியும் தைலங்களைப் பற்றியும் சூரணங்களைப் பற்றியும் கற்பதனால் ஒருவன் சித்த மருத்துவத்தில் வெற்றிபெற முடியாது. தன் அகங்காரத்தை துறந்தவன் எவனோ..? தன் ஆசைகளைக் குறைத்தவன் எவனோ..? புகழை விரும்பாதவன் எவனோ..? அவனே சித்த மருத்துவத்தில் ஒரு தெளிந்த நிலையை அடைந்து வெற்றி பெறுகின்றான்.

சித்தன்போக்கு சிவன்போக்கு என்பது எம் முன்னோர்களின் வாக்கு. அப்படிப்பட்ட சித்தர்களின் மருத்துவத்தை கொழுத்த ஊதியத்துக்காகவும் எண்ணற்ற அரசாங்க சலுகைகளுக்காகவும் வெறும் ஏட்டுப் படிப்பில் முழுவதுமாக கற்றுணர்ந்து விடமுடியாது. அதுவும் ஓர் அறியாமையே. மனதைச் செம்மையாக வைத்து சித்தத்தை தெளிவாக்கிய ஒரு சித்த மருத்துவனால் மட்டுமே பெரும் அற்புதங்களையும் அதிசயங்களையும் சித்த வாழ்வியலில் நிகழ்த்தமுடியும்.

இலங்கை சிவபூமி என அழைக்கப்பட்டாலும் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே எப்போதும் சிவபூமிக்குரிய அனைத்துக் கலாசாரங்களையும், பண்பாடுகளையும் அதன் விழுமியங்களையும் கடைப்பிடித்து வருகின்றது. அங்கும் சித்த மருத்துவத்தில் அது பின்னடைவையே சந்தித்து வருகின்றது.

ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு என்பதை சித்த மருத்துவர்கள் அனைவரும் உணர்ந்தால் மட்டுமே மக்களிடம் சித்த மருத்துவத்தை ஒரு வாழ்வியலாக மாற்றமுடியும். ஏனென்றால் தமிழனின் மருத்துவமே சித்த மருத்துவம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும். இல்லையேல் காலப்போக்கில் தோல்வியைச் சந்திக்கும் ஒரு மருத்துவமாக அது மாற்றம்காண முற்படும் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் மேம்படும் சூழல்நேய உணவு முறை

■ ரி.தர்சிகா
ஊடகக்கற்கைகள்
யாழ். பல்கலைக்கழகம்

இறப்பருக்கான மாற்றுத்தெரிவாக விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்ட பிளாஸ்ரிக், இன்று மனிதத் தேவையின் ஒவ்வொரு தளத்திலும் தன்னை தவிர்க்க முடியாமல் நிலைநிறுத்தியுள்ளது. இன்றைய திகதியில் எம்மைச் சுற்றியுள்ள சூழலை நோக்கும்போது பிளாஸ்ரிக்கை எம் கண்களிலிருந்து அவ்வளவு இலகுவில் விலக்கிவிட முடியாது. நீண்ட வாழ்வுடயதாலும், இயற்கை மாற்றங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதாலும், மிக மலிவாகக் கிடைப்பதாலும் பிளாஸ்ரிக் பாவனை உலகம் முழுவதும் பரவியுள்ளது. அத்துடன் மக்காத தன்மையுடையதால் சுற்றுச் சூழலில் பிளாஸ்ரிக் கலந்து ஏற்படுத்தும் ஆபத்துகளும் மிகை அதிகமே. உச்சக்கட்ட ஆபத்தம்சமாக மக்களின் உணவுப் பாவனையிலும் இன்று பிளாஸ்ரிக் தன் அதீத ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது. ஆனால் இந்தப் பிளாஸ்ரிக் பயன்பாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் பல உணவகங்கள் மேற்கொண்டிருக்கும் மாற்றம் உண்மையில் பாராட்டப்பட வேண்டியதே. யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகங்களில் பெரும்பாலானவை நவீனமயப்படுத்தப் பட்டிருந்தாலும் சில உணவகங்கள் பாரம்பரியத்தைப் பின்பற்றுவதாய் உள்ளன.


**வாழையிலையில் உணவுப்பரிமாற்றம்**

வாழை இலையில் உணவுண்ணும் பழக்கத்தை இன்று பல உணவகங்கள் ஊக்குவித்து வருகின்றன. வாழை இலையில் சாப்பிடுவதால் இளநரை வராமல் நீண்ட நாள்கள் தலைமுடி கறுப்பாக இருக்கும். வாழை இலை ஒரு கிருமி நாசினியாகும். உணவில் உள்ள நச்சுக்கிருமிகளை வாழை இலை அழிக்கும் தன்மை கொண்டது. வாழை இலையைப் பயன்படுத்திச் சாப்பிடுபவர்களுக்கு நோய்கள் வருவதில்லை. தொடர்ந்து வாழையிலையில் உணவு உட்கொண்டு வந்தால் தோல் பளபளப்பாகும், உடல் நலம் பெறும், வலிமை குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகள் நீங்கும். அழல் எனப்படும் பித்தமும் தணியும்.
வாழை இலையின் மேல் உள்ள பச்சைத் தன்மை உணவை எளிதில் சீரணமடையச் செய்வதுடன், வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மை கொண்டது. நன்கு பசியைத் தூண்டும். வாழையிலையில் உண்பவர்கள் நோயின்றி நீண்ட ஆரோக்கியத்துடன் வாழ்வார்கள். இதனைவிட இதயநோய், புற்றுநோய், விரைவாக மூப்படைதல் போன்றன தடுக்கப்படும். இரத்த சுத்திகரிப்பு, நோயெதிர்ப்பு சக்தி, கல் பிரச்சினை, சிறுநீரக பிரச்சினை, தோல் நோய்கள் என்பன நீங்கும்.
வாழையிலை இலகுவாக பெறக்கூடிய மலிவான பொருள் என்பதாலும், பாத்திரங்களின் தூய்மை மற்றும் உணவின் தரம் என்பவற்றை மேம்படுத்தக் கூடியது என்பதாலும் பாத்திரங்களின் மேல் அளவாக வெட்டப்பட்ட வாழை இலையை வைத்து உணவு பரிமாறும் பழக்கத்தை நாம் ஆரம்பித்திருக்கின்றோம்.

பலர் தற்போது வாழையிலையில் உணவுண்ண வேண்டும் என்று கேட்டு உண்கின்றனர். இதுவொரு ஆரோக்கியமான மாற்றமாகும் என்பதே யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உணவகங்களை வைத்துநடத்துகின்ற பலரின் கருத்தாக உள்ளது.

**மட்பாண்டச் சமையல்**

மட்பாண்டத்தின் நன்மைகள் பற்றி நோக்கும்போது மண்பாண்டமா? அதில் சமைக்க முடியுமா? என்று இன்றைய தலைமுறையினர் ஆச்சரியமாக கேட்கும் அவலநிலையில் நாம் உள்ளோம். மண்பானையில் சமைக்கும்போது உணவின் மீது வெப்பம் சமச்சீராகப் பரவுவதால் உணவை சீரான முறையில் சமைக்க ஏதுவாக இருக்கிறது. மேலும் மட்பாண்டச் சமையலால் சத்துகள் பாதுகாக்கப்பட்டு எளிதில் செரிமானமாகக் கூடிய உயர்தர உணவாக அமைகிறது.
'அதிக எண்ணெய் பயன்படுத்த தேவையிருக்காது. உணவின் சுவையும் தன்மையும் கூடுவதோடு ஆரோக்கயத்துக்கும் உகந்ததாக இருக்கிறது. இதில் வைக்கும் தயிர் மற்றும் மாவு வகைகள் புளிக்காமல்




இருக்கும், தண்ணீர் குளிர்ச்சியாகவும், சுவையாகவும் இருக்கும்' என மட்பாண்டங்களில் உணவு தயாரிக்கும் உணவகங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

**உள்ளூர் மக்களுடைய பொருளாதாரம் பலப்படும்**

வாழையிலையில் உணவுண்பதாலோ அல்லது மட்பாண்டத்தில் சமைப்பதாலோ ஏற்படும் பயன்களில் பிரதானமானது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சிறந்ததொரு பொருளாதார வாய்ப்பை ஏற்படுத்துவதாகும். வாழையிலைகளை உணவகங்கள் கொள்வனவு செய்யும்போதும், மட்பாண்டங்களில் உணவு தயாரித்தலை ஊக்குவிக்கும்போதும் அவற்றை நம்பியிருக்கும் பலநூறு குடும்பங்கள் சந்தை வாய்ப்பையும் தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொள்கின்றன. பிளாஸ்ரிக்கின் ஆபத்தான அம்சங்களை இன்று பலரும் உணர்ந்துள்ளனர். ஆனால், பிளாஸ்ரிக்குக்கு எதிரான செயற்றிட்டங்கள் என்பவை பேச்சளவிலேயே இருக்கின்றனவே அன்றி செயலுருப்பெறவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக நாம் எம் உணவுப் பாவனையில் பிளாஸ்ரிக்கைத் தூரமாக வைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு எம் ஆரோக்கியம் மேம்படும். வாழ்வு வளம்பெறும். ■

## நூல் விமர்சனம்




# நினைத்ததை முடித்தவர்

■ செ.செல்வராசா

'நினைத்ததை முடித்தவர்' எனும் நூல் வாசிக்கக் கிடைத்தமையை பெரும் பேறாகக் கருதுகின்றேன். இது ஒரு 'நினைவு' மற்றும் 'சுயசரிதை' நூலாகும்.
'திருப்பணித் தவமணி' சி.தியாகராஜா எனும் சாமானியரின் சாதனைப் பயணத்தை, சரித்திரம் படைத்தமையை எடுத்துரைக்கின்றது. சரித்திரம் படைக்கத் துடிப்பவர்களுக்கான ஒரு வழிகாட்டி நூல் என்றும் சொல்லலாம். உழைப்பால் உயர்ந்த ஒருவரின் சாதனை, சரித்திரம் என்பதற்கு அப்பால், உண்மை, நேர்மை, உழைப்பு, விடாமுயற்சி என்பன ஒருவரை எவ்வளவு தூரம் உயர்த்தும் என்பதற்கான ஓர் உதாரண புருஷரை தரிசிக்கும் ஒரு நூலாகும்.
சி.தியாகராஜா என்றால் அறியாதவர்கள் எஸ்.ரி.ஆர் என்றதும் 'ஓ! அவர்பற்றிய நூலா அது' என வாசிக்க விளைவர். சமயப் பணி, சமூகப்பணி, கல்விப்பணி, கலைப்பணி, அரசியல்பணி எனப் பலபணிகள் ஊடாகத் தன்னைச் சமூகத்துக்கு அறியத் தந்தவர் எஸ்ரிஆர்.
ஓய்வில்லா இப்பணிகளுக்கு மேலாக, திரையரங்குகள் பலவற்றின் உரிமையாளர் என்ற வகையிலும் பல்லாயிரக்கணக்கான சினிமா இரசிகர்களால் நாட்டின் பலபாகங்களிலும் அறியப்பட்ட சாமானியன் ஒருவர் சாதனையாளன் ஆன வரலாறுபற்றி பேசும் இந்நூல், வாசிப்பினை நேசிப்பவர்களையும் சாதனையாளர்களாகத் திகழ உந்துதலளிக்கும் தன்மைகொண்டதாக இதன் உள்ளடக்கம் அமையப்பெற்றுள்ளது.
'ஊருக்குள் அவருக்கொரு பேர் இருக்கு' என்ற தொகுப்பாசியர் பொ.ஐங்கரநேசனின் கட்டுரையுடன் விரியும் இந்த நூலை, ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், கல்வியியலாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், பொதுமன்ற நிர்வாகிகளென பல பிரபல்யமானவர்களின் நயப்புரைகள் அலங்கரிக்கின்றன. இந்நயப்புரைகள் வாசகர்களை வியப்பிலாழ்த்தும் என நிச்சயமாகக் கூறமுடியும்.
அறிஞர்களின் நயப்புரைகளுக்கு மேலாக,
'எண்ணம் போல வாழ்வு' எனும் 'எஸ்ரிஆரின்' சுயசரிதையையும் இந்தநூல் கொண்டுள்ளது. தனது பள்ளிக் கல்வியை எட்டாம் வகுப்புடன் நிறுத்தியதைப் பகிர்ந்துகொள்ளும் அவர் எட்டாத உயரங்களைத் தொட்டதைச் சுவைபட, மிக எளிதான தமிழில் எடுத்துக் காட்டுகின்றார்.
நினைத்ததை முடித்த இவ்வுயர் பண்பாளர் உழைப்பாளி 'உலகம் சுற்றும் வாலிபனாக' உலகின் பல பாகங்களுக்குமான சுற்றுலாவினையும், ஆன்மீகத் தலங்களின் மற்றும் தலைவர்களின் சந்திப்புகளையும், புகைப்படங்கள் மூலமாகவும் பதிவு செய்கின்றார். உயரத் துடிப்பவர்களுக்கு உந்துதல் அளிப்பதாக இந்த நூல் மனப்பதிவை ஏற்படுத்துகின்றது. வாசிப்போம், எமதும், எம்மவர்களின் உயர்வை நேசிப்போம்.

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
0773165555
puthanpoikaiuthayan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரச்சின் கிளாசிக்: துபே மிரட்டல்

# குஜராத் ரைட்டன்ஸை வீழ்த்தியது சென்னை!



சென்னை, மார்ச் 27

ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், குஜராத் ரைட்டன்ஸ் அணியை இலகுவாகத் தோற்கடித்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்ப வீரர்களான ரச்சின் ரவீந்திரா மற்றும் அணித்தலைவர் கெய்க்வாட் இருவரும் அற்புதமான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தனர். ஆரம்பம் முதலே தாண்டவமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் ரச்சின். அவர் 20 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். ரகானேயின் ஆட்டம் தாக்கத்தை ஏற்படுத்துவதாக நேற்று இருக்கவில்லை. அவர் 12 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்றார். கெய்க்வாட் மற்றும் துபே இருவரும் இணைந்து அணியை பலமான நிலையை நோக்கி நகர்த்திச் சென்றனர். 46 ஓட்டங்களுடன் கெய்க்வாட்டும், துபே 23 பந்துகளில் 51 ஓட்டங்களையும் சேர்க்க முடிவில் 6 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது சென்னை.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரஷீத் கான் 49 ஓட்டங்களை நேற்று விட்டுக்கொடுத்தார். அவரின் பெறுபேற்றில் ஏற்பட்ட தொய்வு குஜராத் அணியை பலமாகத் தாக்கியது.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணியின் முன்னணி வீரர்களை தனது 'ஸ்விங்' பந்துவீச்சால் திக்குமுக்காட வைத்தார் தீபக் சகர். கில் வெறும் 8 ஓட்டங்களுடனும், சகா 21 ஓட்டங்களுடனும் சாகரால் வீழ்த்தப்பட்டனர். சாய் சுதர்சன் 37 ஓட்டங்களைப் பெற்றபோதிலும் அதற்காக அவர் 31 பந்துகளை எதிர்கொண்டார். இந்த அதீத நிதானமும் குஜராத்துக்குப் பின்னடைவையே ஏற்படுத்தியது. மில்லர் பெற்ற 21 ஓட்டங்களே மத்திய வரிசையில் பெற்ற அதிகபட்சம். 20 ஓவர்கள் நிறைவில் குஜராத் அணியால் 8 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதையடுத்து 63 ஓட்டங்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றிபெற்றது. (ம)

## அரசசேவை பட்டதாரி உத்தியோகத்தர் போராட்டம் வடமாகாண அரசசேவை பட்டதாரிகள் முழு ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அபிவிருத்தி அலுவலர் சேவைச் சங்கத்தால் கொழும்பில் பொதுநிர்வாக அமைச்சுக்கு முன்பாக இன்று மேற்கொள்ளும் போராட்டத்துக்கு வடமாகாண அரசசேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வடமாகாண அரசசேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான பொதுச் சேவைக் கட்டமைப்பில் அதாவது அவரவர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விசேட தரங்களுக்கு பதவி உயர்த்தும் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அந்தந்த அலுவலர்களின் சேவைகளுக்குள் மேற்பார்வைத்தர பதவி நிலையினை ஏற்படுத்தும் நோக்கினை இலக்காகக் கொண்டு அமைந்துள்ளது.

நாடு முழுவதிலுமாக சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட அலுவலர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இதுவரை இவ்வாறானதொரு மேற்பார்வைத்தரம் அதாவது விசேட தரம் ஒன்று உருவாக்கிக் கொள்ளப்படவில்லை. இதனால் இந்த உத்தியோகத்தர் சேவையில் பொருத்தமான பதவி உயர்வுக்கான நிலைமைகள் இதுவரை சீர்செய்யப்படவில்லை. அதேசமயத்தில் அலுவலர்களின் கல்வித்தராதரங்களுக்கு அமையவும், நவீன தொழில்நுட்ப முறைகளுடன் கூடிய புத்தாக்க முறைகளை அலுவலகங்களில் ஏற்படுத்திக்கொள்ளவும். அலுவலர்களின் தனிப்பட்ட திறமைகளை அடையாளங்கண்டு பொறுப்புக்களை ஒப்படைக்கவும். போதுமான அளவில் பணிகளைப் பகிர்ந்தளிக்கவும் இயலாத நிலைமையே தற்போது பொதுச்சேவையில் காணப்படுகின்றது. - என்றுள்ளது. (ம)


## கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சபை நிதி - 2024 (கட்டம் IV)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.03.27 ஆம் திகதியில் இருந்து 2024.04.09 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.03.27 ஆம் திகதியிலிருந்து 2024.04.09 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும், 2024.04.10 ம் திகதி காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **3000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம்** கிழக்கு பிரதேச சபை, **பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.04.10 ஆம் திகதி பி.ப. 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.04.03 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம |
| NP/14/41(13)/4 /Council/PIV/ 2024/19 | தாய்ப்புலம் வீதி புனரமைப்பு – பத்தமேனி | 8.02 | 90 நாட்கள் | C7& C6 ( வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 81,000.00 | 24.07.2024 |
| NP/14/41(13)/4 /Council/PIV/20 24/20 | வளலாய் இறைச்சி கடை அமைத்தல் – வளலாய் | 6.70 | 90 நாட்கள் | C7& C6 ( கட்டட நிர்மாணம்) | 77 நாட்கள் | 67,000.00 | 24.07.2024 |
| NP/14/41(13)/4 /Council/ Maintenance / PIV /2024/21 | சேமிபுலம் திருத்தம் (மீள்தாரிடல்) – உரும்பிராய் | 1.31 | 60 நாட்கள் | C9 & C8 ( வீதி நிர்மாணம்) | 49 நாட்கள் | 14,000.00 | 26.06.2024 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.03.27

(CR 41977) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணகம்

05 . 09 . 1954



விண்ணகம்

20 . 03 . 2024

## ஞானேஸ்வரி தனபாலசிங்கம் (சாந்தா)

யா/புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வாழ்விடமாகவும், பிரான்ஸ் பரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி தனபாலசிங்கம் (சாந்தா-முன்னாள் ஊ.ப.நோ.கூ.ச) கடந்த 20.03.2024 புதன்கிழமை பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் நடராசா - நீலாம்பிகை தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் மூத்த மருமகளும், தனபாலசிங்கம் (பிரான்ஸ், முன்னாள் வே.ப.நோ.கூ.ச) அவர்களின் அன்புத் துணைவியாரும், மயூரன், பாலன், குசன், உத்தமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிறிதரன்(கனடா), சிறிரஞ்சன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் செல்வராணி(வேவி), புஸ்பராணி(ஆச்சி), கந்தசாமி(ராசன்-பிரான்ஸ்), விஜயராணி (தஞ்சம் - ஜேர்மனி), இந்திராணி(வசந்தா- கனடா), அமரர் சர்வானந்தன் மற்றும் வசந்தராணி (சுந்தரி-பிரான்ஸ்), கந்தவேல் (குகன்-பிரான்ஸ்), ஜெயராணி (தங்கச்சி) ஆகியோரின் அண்ணியாரும், பரநிருபசிங்கம், தவபாலன், சிவலிங்கம் (ஜேர்மனி), பரமேஸ்வரன்(கடவுள்-கனடா), சத்தியமூர்த்தி (சத்தியம்- பிரான்ஸ்), சிவநேசன், வாசுகி (கனடா), அமரர் குணாநிதி ஆகியோரின் மைத்துனியும், சிவரஞ்சனி (கலா-பிரான்ஸ்), மங்களவாணி (சித்திரா-பிரான்ஸ்), ஆகியோரின் சகலியும், கார்த்திகா, இராஜதீபன், ராஜிகா, ஜலதீபன், பவதாரணி, திவாகர், கௌசிகா, தர்ஷன், விதுஷன், தினுஷா, தனுஷன், ஜினோஸ், குமணன், அமரர் பிரேமிளா மற்றும் லக்ஸ்மன், கேன்சாயினி, பிரணவன், யதுர்ஷன், டிஷாந்தன், கோபினா, அனிதா, அஜிதா, அஸ்விதா, வினோதன் ஆகியோரின் பாசமிகு அத்தையும், கஸ்தூரி, நர்மதா, கவிஞன், சபிதா, சகிதா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.03.2024) புதன்கிழமை Funerarium, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0033 651 449 541**
**077 604 9581**

(CS/54538) J-1

## கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ.து) மூளாய் - பதவி வெற்றிடங்கள்

**நிர்வாக உத்தியோகத்தர் (Administrative Officer)**
- பட்டதாரி - 05 வருட துறைசார் அனுபவம்/க.பொ.த(உ/த) சித்தியுடன் 10 வருட அனுபவம்.
- நிர்வாகம் சார்ந்த முன் அனுபவம்
- கணினியில் சித்தியும் முன் அனுபவமும்.
- முகாமைத்துவம் சார்ந்த அனுபவம்.
- மொழிகளில் சிறந்த ஆற்றல்.
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**குடும்ப நல உத்தியோகத்தர் (Midwife)**
- க.பொ.த(உ/த) சித்தி, மகப்பேற்று சித்தி தகைமை சான்றிதழ்
- மகப்பேற்று விடுதியில் ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**மருந்தாளர் (Pharmacist)**
- மருந்தாளர் பதிவுச் சான்றிதழ் (Registration Certificate).
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**மருந்தக உதவியாளர் (Pharmacy Assistant).**
- க.பொ.த(உ/த) சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம்.

**இரத்தம் எடுப்பவர் (Phlebotomist)**
- க.பொ.த(உ/த) சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

**தாதிய உத்தியோகத்தர் - ஆண்,பெண்**
- தகைமை பெற்றவர்கள்.
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

**சுகாதார உதவியாளர் - ஆண்**
- க.பொ.த(சா/த) சித்தி
- ஏற்கனவே கடமையாற்றிய முன் அனுபவம் விரும்பத்தக்கது

விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (e-mail) 10.04.2024 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய**
முகவரி :- கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய், சுழிபுரம்.
E-Mail :- moolaii@yahoo.com தொலைபேசி இலக்கம் :- 0212250441 , 0212250771

**தலைவர்/செயலாளர்**
**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய்.**

# கண்ணீர் அஞ்சலி

## ஞானேஸ்வரி தனபாலசிங்கம் (சாந்தா)



**தோற்றம்**
**05.09.1954**

**மறைவு**
**20.03.2024**


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

**சரவணை - தேவபுரம்**
**ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவில்**
**பரிபாலன சபையினர்.**

(CS/54542) J-1

# மரண அறிவித்தல்

## குழந்தைவேலு கனகபூசணம் (தேவி)



**தோற்றம்**
**02.01.1939**

**மறைவு**
**23.03.2024**

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மேற்கு கொத்தியாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கனகபூசணம் (தேவி) கடந்த 23.03.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற குழந்தைவேலுவின் பாசமிகு மனைவியும், கனகரட்னம் (மலேசியா), இராசரத்தினம் (நாகம்ஸ்), அரசரெத்தினம் (நாகம்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பிரகாஞ்சனி மற்றும் சிவபாலன் (கனடா), கிருஸ்ணவேணி (திருகோணமலை), சிவஞானம் (நியூசிலாந்து), சிவகுமார (நியூசிலாந்து), கலைவாணி (சுவிஸ்), சிவதாஸ் (கனடா), சிவனேசன் (நியூசிலாந்து), யோகாஞ்சலி (அமெரிக்கா), சிவயோகம் (அவுஸ்ரேலியா), சிவரூபன் (நியூசிலாந்து), சந்திரவதனி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சுசிலாதேவி (கனடா), கெங்கேஸ்வரன் (திருகோணமலை), மகேஸ்வரி (நியூசிலாந்து), ரஜினி (நியூசிலாந்து), சிதம்பரநாதன் (அமெரிக்கா), ஜெயந்தினி (அவுஸ்ரேலியா), தர்மினி (நியூசிலாந்து), கௌரிகாந் (கனடா), மஞ்சுலா (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் புஸ்பா (மலேசியா), காலஞ்சென்ற அம்பிகாதேவி மற்றும் நவரஞ்சினிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர் மற்றும்**
**பேரப்பிள்ளைகள்.**
**076 605 4546**
**076 914 7059**

(CS/54533) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனாவில் திக்திக் 'லிப்ட்'!

## நேற்றும் சிக்கிய நோயாளர்கள் போராட்டத்தின் பின் மீட்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 27**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நரம்பியல் பிரிவுக்குச் சென்றுகொண்டிருந்த மின்தூக்கி (லிப்ட்) தொழில்நுட்பக் கோளாறு காரணமாகப் பழுதடைந்து நேற்று இடை நடுவில் நின்றது.**

'லிப்ட்' பழுதடைந்து இடைநடுவே நின்ற போது, லிப்ட்டுக்குள் இரண்டு நோயாளர்கள், சுகாதார ஊழியர் மற்றும் தாதியர் என நால்வர் சிக்கிக் கொண்டுள்ளனர். லிப்ட்டுக்குள் சிக்கிக்கொண்ட தாதி தனது கணவனுக்கு அழைப்பெடுத்து, விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தாதியின் கணவர் மருத்துவமனைப் பணியாளர்களின் உதவியுடன் அனைவரையும் மீட்டெடுத்தார்.

இந்த மின்தூக்கி (லிப்ட்) இவ்வாறு பழுதடைவது இதுவொன்றும் புதிதல்ல என்றும், அடிக்கடி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சத்தியமூர்த்தியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

மின்தூக்கி பழுதடைந்தது தொடர்பாக எனக்கு முறையிடப்பட்டதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மின்தூக்கிக்குள் சிக்கியிருந்தவர்களை மீட்டுள்ளோம். இந்தத் தவறு உரிய முறையில் சீர்செய்யப்பட்டு இனி வினைத்திறனான முறையில் அதன் இயங்குநிலை உறுதிப்படுத்தப்படும் - என்றார்.

(அ-ம-26)

# விசேட தேவையுடைய மாணவர்களை காக்கவைத்த போதனா மருத்துவமனை

யாழ்ப்பாணம், மார்ச் 27

விசேட தேவையுடைய மாணவர்கள் தமக்கான சிகிச்சையைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று நீண்ட நேரம் காத்திருந்தனர்.

பாடசாலைக்குச் சென்றுவிட்டு, பாடசாலை நேரத்தில் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தநிலையில், மாணவர்களுக்கு எவ்வித முன்னுரிமை நடவடிக்கையும் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. நீண்டநேரம் மாணவர்கள் காத்திருந்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சத்தியமூர்த்தியைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

இந்த விடயம் தொடர்பில் இன்னமும் எனக்கு எந்தத் தரப்பும் முறையிடவில்லை. அவ்வாறு ஏதேனும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுமாயின் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

(அ-ம-26)

# விபத்தில் யுவதிக்கு காயம்!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், யுவதியொருவர் காயமடைந்தார். காயமடைந்த யுவதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-15)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வணிகமாணி சிறப்பு பட்டப்படிப்பு – 2021/2022
### Bachelor of Commerce Honours Degree Programme – 2021/2022

**புதிய அனுமதிக்கான விண்ணப்பம் - 2024 – அணி – VIII**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணி சிறப்புக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2022 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானவர்கள்.

**அல்லது**

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்

**வணிகமாணியில் பாட அலகுகளிற்கான விலக்களிப்புக் கோருதல்:**
வணிகமாணி கற்கை நெறியில் காணப்படும் பாட அலகுகள் அல்லது அதற்குச் சமனான பாட அலகுகளை உள்ளடக்கிய கற்கை நெறிகளில் சித்தியடைந்தோர், உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விலக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியும். அவர்கள் தகைமை பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் **பாட அலகுகளிற்கான** விலக்களிப்பு அனுமதிக்கப்படும்.

**மாணவர் தெரிவு:**
விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் (Z-Core) அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது மூன்றின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள். பொது உளச்சார்புப் பரீட்சைக்கான தேவை ஏற்படின் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000.00 இனை **890082080000061** என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி https://www.codl.jfn.ac.lk/index.php/bcom-batch-viii/ எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 10.05.2024 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)**

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுகொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
25.03.2024.

(CR 41978) A-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**அதிபர்: திரு மகாதேவன் மகாகேதீஸ்வரன்**

எமது பாடசாலையின் அதிபர், திரு. மகாதேவன் மகாகேதீஸ்வரன் அவர்கள் 16.11.2021 தொடக்கம் செயற்படும் வண்ணம் 09.01.2024 அன்று, அதிபர் சேவையின் தரம் 1 பதவியுயர்வினைப் பெற்றுள்ளார். பதவி உயர்வு பெற்ற அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்.



**ஆசிரியை: திருமதி நிர்மலராணி தேவராஜா**

31.01.2024 அன்று (BMICH) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலையை சேர்ந்த ஆசிரியை திருமதி. நிர்மலராணி தேவராஜா அவர்கள் "கல்வி இளமாணி (BEd)" பட்டம் பெற்றுள்ளார். அவரை வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.



**ஆசிரியர்: திரு கிருஷ்ணபெருமாள் ஜெனத்மேனன்**

13.12.2023 அன்று (BMICH) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. கிருஷ்ணபெருமாள் ஜெனத்மேனன் அவர்கள் "கல்வி முதுமாணி (MEd)" பட்டம் பெற்றுள்ளார். அவரை வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை

(cs28108) J-1

## வீடு வாடகைக்கு

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். தளபாட வசதிகளும் உண்டு. நிறுவனப் பாவனைக்கு அல்லது மாணவர், தொழில் புரிபவர்கள் குழுவாக தங்குவதற்கு மட்டும் வழங்கப்படும்.

075 979 9161, 074 072 9161

(CS/54543) J-1

## தென்மராட்சியில் முன்னணி நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

- தொழில் நுட்ப உத்தியோகத்தர்
- அலுவலக உத்தியோகத்தர் (பெண்)

தொடர்புகளுக்கு: 077 666 9933

மின்னஞ்சல் முகவரி : kmteng@12gmail.com

(CS/54545) J-1

## காணி விற்பனைக்கு

உசனில் பயன்தரும்
தென்னைமரங்களுடன்.
குழாய்க் கிணற்றுடன்.
இரட்டைக் கதவுடன்
**காணி விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:- 077 456 7091

(CS/41973) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெடுக்குநாறிமலை விவகாரம்; முறையிடப்பட்டது ஐ.நா.விடம்

வவுனியா, மார்ச் 27
சிவராத்திரி தினத்தன்று, வவுனியா வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டவர்களில் 6 பேர் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 8ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று சமய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவேளை எட்டுப் பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்களுக்கு எதிரான வழக்கு கடந்த 19ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டு அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.
'பொலிஸார் கோரியபடி அவகாசம் வழங்கப்பட்டும் சந்தேகநபர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாமல் பொலிஸார் இழுத்தடிப்பது பிணை வழங்க முடியாத குற்ற வழக்கின் குற்றப் புகாரில் பொலிஸாரின் நடவடிக்கை சந்தேகநபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கும் நோக்கத்துடன் செய்யப்படுவதாகத் தெரிகின்றது' என்று நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.
இந்த நிலையிலேயே, கைதான எட்டுப் பேரில் ஆறு பேர் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் நேற்று முறைப்பாடு வழங்கியுள்ளனர்.
அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்துத் தண்டிப்பதுடன், எதிர்காலத்தில் இடையூறுகள் இன்றி ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான சூழல் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமென வலியுறுத்தி அவர்கள் மனுவொன்றையும் கையளித்துள்ளனர். (அ-ம-26-110-66)

# பாலம் இடிந்து வீழ்ந்து 20 பேர் பரிதாபச் சாவு

## இலங்கைக்கு வந்த கப்பலால் அமெரிக்காவில் அசம்பாவிதம்

கொழும்பு, மார்ச் 27
இலங்கைக்கு வந்துகொண்டிருந்த கப்பல், அமெரிக்காவின் புகழ்பெற்ற பால்டிமோர் பாலத்தை மோதித் தகர்த்ததில் பாலத்தில் பயணித்துக்கொண்டிருந்த வாகனங்கள் கடலுக்குள் வீழ்ந்து மூழ்கின. இதில் 20 பேர் உயிரிழந்தனர்.
சிங்கப்பூர் கொடியுடன் இலங்கைக்கு வந்துகொண்டிருந்த சரக்குக் கப்பலாலேயே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது. பாலத்தின் மீது சரக்குக் கப்பல் மோதும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது. தீயணைப்புப் படையினரும் மீட்புக் குழுவினரும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம)

## காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைக்குள்

# 500 கிலோ இரும்புத் திருட்டு பொலிஸாரால் இருவர் கைது

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்து இரும்புத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குள் வாகனமொன்றில் அத்துமீறி நுழைந்து, இருவர் இரும்புத் திருட்டில் ஈடுபட்டதாகப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் திருட்டில் ஈடுபட்ட இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள், திருடப்பட்ட இரும்புக் கம்பிகளுடனும் திருட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்துடனும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். (அ-ம-66-26)

## அக்குபஞ்சரால்...

வராவார். அக்குபஞ்சர் தொடர்பில், 'பேஸ்புக்கில்' வெளியான பதிவொன்றைப் பார்த்துவிட்டு கடந்த 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் அவர் சிகிச்சையை மேற்கொண்டுள்ளார். 6ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
அக்குபஞ்சர் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் ஊசி உள்ளிட்ட உபகரணங்களால் கிருமித்தொற்று ஏற்பட்டு அவர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-23)

## முகாமிலுள்ள...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதானவர்கள் சிறைத்தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், இலங்கையர்களான சாந்தன், முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். அவர்களில் சாந்தன் உடல்சுகவீனமடைந்து உயிரிழந்த நிலையில், ஏனைய மூவரையுமாவது விரைவில் விடுவிக்கவேண்டும் என்று தமிழக அரசுக்கு உச்சக்கட்ட அழுத்தம் வழங்கப்பட்டது.
இவர்களில், தனக்கு அடையாள அட்டை வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு முருகன் சென்னை உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்தமனுமீதானவிசாரணைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் மூவரும் அடுத்தவாரம் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர். அதற்குரிய கடவுச்சீட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்ற தகவலை தமிழக அரசு நீதிமன்றில் தெரிவித்தது.
"திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் ஆகிய மூவரையும் இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளன. அவர்களுக்கு இலங்கைத் துணைத்தூதரகத்தால் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் (புதுடில்லி அரசு) ஒப்புதல் கடிதம் கிடைத்ததும் மேற்படி மூவரும் இலங்கைக்கு அடுத்தவாரமளவில் அனுப்பப்படுவார்கள்" என்று தமிழக அரசின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.
தமிழக அரசின் சட்டத்தரணிகளுடைய கருத்துகளை நீதிமன்றக் குறிப்பில் பதிவிடுமாறு நீதிபதிகள் அறிவுறுத்தினர். (அ-ம-100-26)

## இலங்கை...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி தற்போது திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவரான முருகன், தனக்கு இலங்கை அடையாள அட்டையை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சிறப்பு முகாமின் பிரதிநிதிகளுக்கு உத்தரவிடுமாறுகோரி சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.
இலங்கைக் கடவுச்சீட்டைப் பெறுவதற்கு அடையாள அட்டை தேவைப்படுவதாக தனது மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முருகனுக்கு சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தால் கடவுச்சீட்டு வழங்கப்பட்ட விடயத்தை தமிழக அரசின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள். இதையடுத்தே, அடையாள அட்டை வழங்குமாறுகோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் முருகன் தாக்கல் செய்த வழக்கு நீதிபதிகளால் முடிவுறுத்தி வைக்கப்பட்டது.
கடவுச்சீட்டைப் [illegible] யாள அட்டை தேவை என்று முருகன் குறிப்பிட்டுள்ளதால், கடவுச்சீட்டு அவருடைய கைகளுக்கு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதன் அடிப்படையிலேயே இந்த வழக்கு முடிவுறுத்தப்படுவதாக நீதிபதிகள் தெரிவித்தனர். (அ-ம-26)

## வடக்கில்...

வடக்கில் ஏற்கனவே பணியாற்றியவன் என்ற அடிப்படையில் இங்குள்ள பிரச்சினைகள் பலவற்றை அனுபவரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் நான் அறிவேன். ஆதலால், வடமாகாண மக்களுடன் இணைந்து பணியாற்றுவதில் எனக்கு எந்தச் சிரமமும் இருக்கப்போவதில்லை. வடக்கு மாகாணத்தில் வீதிப்போக்குவரத்தில் உள்ள குறைபாடுகள் விரைவில் நிவர்த்திசெய்யப்பட்டுமேம்பட்டரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும். போதைப்பொருள் பிரச்சினைகள், சமூகத்தில் புரையோடிப்போயுள்ள இதர குற்றச்செயல்கள் விரைவில் கட்டுப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் விரைவில் மேற்கொள்வேன் - என்றார். (அ-ம-26)

## கைவிடப்பட்டது...

யாழ்ப்பாணம், கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள காணிகளை, நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணி பொதுமக்களினதும் தமிழத் தேசிய அரசியல் கட்சிகளினதும் கடுமையான எதிர்ப்பையடுத்துக் கைவிடப்பட்டது.
தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/226 நகுலேஸ்வரம் கிராம சேவகர் பிரிவு, ஜே/233 காங்கேசன்துறை கிராமசேவகர் பிரிவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆழ்வான் மலையடி, வேலர்காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான் புதுக்காடு, சோலை சேனாதிரவன் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 29 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்குடன் இந்த அளவீடுகள் முன்னெடுக்கப்படுவதாக இருந்தது.
காணிகளை அளவிடுவதற்காக அதிகாரிகள் வந்தபோது, காணிகளின் உரிமையாளர்கள், பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். சிலர், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் பயணித்த வாகனத்தையும் இடைமறித்துப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.
'காணிகள் அளவிடுவதில் தமக்கு உடன்பாடு இல்லை' என்று காணிகளின் உரிமையாளர்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஆவணத்தைப் பெற்றபின்னர் நில அளவைப் பணிகள் கைவிடப்படுவதாக அறிவித்து, நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர். (அ-ம-66-20)

## மீசாலையில்...

கொடிகாமம், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள பாதசாரிக் கடவைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த சின்ராசா சுதன்ராஜா (வயது - 41) என்ற நபரே உயிரிழந்தவராவார்.
விபத்தில் உயிரிழந்த முன்னாள் போராளி, போர்க்காலத்தில் ஒருகாலை இழந்தவர். அவர் தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்து கல்விகற்றுவரும் தனது மூத்த மகளின் கல்விச் செலவுக்கான பணத்தைக் கொடுத்து மகளைப் பார்த்துவிட்டுச் செல்வதற்காகச் சென்றுகொண்டிருந்த நிலையிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.
சொகுசுப் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் இருவரும் கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ச-ம-100-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் உலக நாடக விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் சர்வதேச நாடகவிழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இன்று மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் சிறப்பு விருந்திராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ள உலக நாடக தினவிழாவில், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் என்பனவும் அரங்கேற்றப்படவுள்ளன. (ம)

**காணி விற்பனைக்கு**

**மூளாய் வீதி வட்டுக்கோட்டையில்**

இரண்டு பரப்பு வெற்றுக் காணி

**விற்பனைக்கு உண்டு.**

(தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு:

**077 038 1266, 077 310 7173**

(CS/54546) J-1

## பண வசூலிப்பாளர்
### (COLLECTION OFFICER)

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
**பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்க லாம்.**



ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (30.03.2024) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் ந.ப 12.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

**உதயன்**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## வேலையாட்கள் தேவை

**காங்கேசன்துறையில் அமைந்துள்ள**
பண்ணை ஒன்றிற்கு தங்கி நின்று
வேலை செய்வதற்கு
**வேலையாட்கள் தேவை.**
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 747 4498**

(CS/54539) J-1

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறைக்கு அனுபவமிக்க வேலை ஆட்கள் தேவை.
மேசன்
கூலி
எலக்ரீசியன் (Electrician)

தொடர்புகளுக்கு: **077 96 69 498**
**076 76 00 403**

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 12 . 1943

மறைவு 26 . 03 . 2024

### இன்னாசிமுத்து நீக்கிலஸ் வீரக்கோன்

**(GTZ நிறுவனத்தின் முன்னாள் பணியாளர்)**

பழையவாய்க்கால், மிருசுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து நீக்கிலஸ் வீரக்கோன் அவர்கள் 26.03.2024 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - இன்னாசிமுத்து, இன்னாசிமுத்து-தங்கரத்தினம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற கஸ்பார்-சபீனா (ராணி), தம்பதியரின் அன்பு மருமகனும் செலஸ்மேரி (கருணா) அவர்களின் அன்புக் கணவரும் அனா, ஜானு, பெனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்கந்தகுமார், வினோத் ஆகியோரின் மாமனாரும் ரவிற்றா, சகானா, நிக்கில் யோகான், ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசக்கோன் அழகக்கோன், இராசமலர், வேந்தகோன் மற்றும் இராசமணி, விஜயக்கோன் ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 27.03.2024 இன்று பிற்பகல் 3.30 மணியளவில் இல்லத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டு புனித நீக்கொலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்:**
**மனைவி பிள்ளைகள்**

(CS 28353 (4x20) V-1

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ



தோற்றம் 07 . 04 . 1972

மறைவு 26 . 03 . 2024

### திருமதி சிற்சபேசன் கீதா

காளிகோவிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிற்சபேசன் கீதா அவர்கள் நேற்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தர்ராஜன்-லீலாவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகாலிங்கம்-தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், சிற்சபேசன் (அப்பன்) அவர்களின் அன்பு மனைவியும் சஜீபனா, யசிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமல்ராஜ் அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சறோஜினி (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சிதம்பரநடேசன் மற்றும் கலாவதி, லிங்கேஸ்வரி, ராஜன், கௌரி, கோபி, சிவனேஷ், காந்தன் (சுவிஸ்), தேவப்பிரியா ஆகியோரின் மைத்துனியும் வனிதா, காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் சுதாகரன், வாணி, சிவகுமார், சாந்தி, லோகேஸ்வரன் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (28.03.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**காளிகோவிலடி,**
**வட்டு-தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**கணவன் (அப்பன்) 076 841 1572**

(CS 28351) V-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 28 . 11 . 1946

இறப்பு 26 . 03 . 2024

### கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்

கோவிலாக்கண்டி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் நேற்று (26.03.2024) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சந்திரசேகர் - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், துசிகரன், பிரபாகரன் (பிரான்ஸ்), கவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரவதனி, தனலக்சுமி, சிறிகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிர்மலரூபினி (பிரான்ஸ்), புவலோஜினி (பிரான்ஸ்), வசந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கரீஸ் (பிரான்ஸ்), கரினி (பிரான்ஸ்), கனிஷா, றக்ஷயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.03.2024) வியாழக் கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள், மகன்- துசிகரன் (பிரான்ஸ்)**
**மகன் - பிரபாகரன் (பிரான்ஸ்)**
**மகள் - கவிதா**
**T.P:076 733 6490**

(CS 28352) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.